மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மண்வளப் பாதுகாப்புப் பணிகளை முதற்கண் மங்கலம் கிராமத்தில் 50 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் நிறைவேற்றலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. (மண்வளப் பாதுகாப்பு) முன்னேடிப் பணிகளை, உடனடியாகக் கவனிக்கும்படி பல்லடம் வேளாண்மைப் பொறியியல் மேற் பார்வையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குடியானவர்கள், இத்திட்டத்தை ஊக்கமுடன் வரவேற்றால், இத் திட்டத்தை மேலும் கூடுதல் பரப்பில் நிறைவேற்ற இயலும்.

திரு. சு. துரைசாமி : பல்லடம், அவிநாசி இப்படிப்பட்ட தாலுக் காக்களில் பருவ மழை போதிய அளவு இல்லாத காரணத்தினுல் இந்தத் தாலுக்காக்களில் உடனடியாக மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தை அமுல் நடத்தி விவசாயிகளுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது கோயம் பத்தூர் துணைக்கோட்டம் உள்ளிட்டு 18 மண் வளப் பாதுகாப்புத் துணைக் கோட்டத்தை தொடர்ந்து நடத்த அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

கோழி வளர்ச்சி ஆய்வுக் குழு

* 55 வினு—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோழி, வாத்து பண்ணை சம்பந்தமான மூவர் கமிட்டி அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்துவிட்டதா?

(இ) ஆம் எனில், அவ்வறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) கோழி, வாத்து வளர்ச்சி சம்பந்தமான மூவர் கமிட்டியின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : இந்த அறிக்கை வந்தவுடன் அங்கத்தினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த அறிக்கையை கனம் அங்கத்தினர்கள் கவனத்திற்காக சபையில் வைக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: இது சம்பந்தமாக அமைக்கப் பட்ட மூவர் கமிட்டியின் உறுப்பினர்கள் பெயரை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

1968 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: திரு. ஆ. துரையரசன் ஓர் உறுப்பினர்—அதன் தலைவர். திரு. எஸ். ஜே. ராமசாமி ஓர் உறுப்பினர், ரெவரன்ட் பாதர் கலாத்தில்—திருச்சியைச் சேர்ந்தவர் ஓர் உறுப்பினர். அனிமல் ஹஸ்பெண்டரி டைரக்டர் அதன் செயலாளர்.

திரு. டி. மார்ட்டின் : தற்சமயம் பஞ்சாயத்து யூனியன்களில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கோழிக் குஞ்சுகள் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்களே, அது சம்பந்தமாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினர் இது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதற்கு நன்றி. இந்தக் கமிட்டியினர் அரசாங்கக் கோழிப்பண்ணை, தனியார் கோழிப்பண்ணை எல்லாவற்றையும் நன்கு பரிசீலித்து, இந்த கோழிப்பண்ணையை லாபகரமாக நடத்துவது பற்றி அறிக்கை கொடுக்கவிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து மேலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, தனியார் நடத்துகிற கோழிப்பண்ணை லாபமாக இருக்கிறபோது, சர்க்கார் நடத்துகிற கோழிப்பண்ணையில் நட்டம்தான் ஏற்படுகிறது. ஆகவே, கோழிப்பண்ணை நடத்துவதை தனியாரிடத்திலேயே விட்டு விட்டு அவர்களுக்கு ஊக்கமும், உதவியும் அளிக்க சர்க்கார் திட்டமிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அரசாங்கக் கோழிப்பண்ணைகளில் நட்டம் வருகிறது என்கிற விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாகத்தான் இந்த மூவர் கமிட்டியையே அரசாங்கம் நியமித்தது. இவர்களது அறிக்கையைப் பரிசீலனை செய்து, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, கோவைக்குச் சமீபத்திலே துடியலூர் என்ற இடத்திலே டி. என். பழனிசாமி கவுண்டர் என்பவர் ஒரு பெரிய கோழிப்பண்ணை வைத்து நடத்தி வந்தார். அங்கே ஒரு அதிகாரி போய் அளவுக்கு மேற்பட்ட வேகமான ஊசி மருந்துகளைப் போட்டுவிட்டதன் காரணமாக அங்கே உள்ள கோழிகள் எல்லாம் இறந்துவிட்டதால் அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இனி மேலாவது அப்படி அதிகாரிகள் நடக்காமல் இருக்கும்படி செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அங்கத்தினர் இப்பொழுது கேட்ட கேள்வியைத் தனியாக அரசாங்கத்திற்கு எழுதியனுப்பினால் அது பரிசீலிக்கப்பட்டு தவறு நடந்திருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

[1968 பிப்ரவரி 16

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒரு முட்டையின் விலை ஒரு ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று செய்தித்தாளில் வந்திருக்கிறது. இப்படி விலை ஏறியிருப்பதற்குக் காரணம் நிர்வாகப் பளுதான் என்று பொது மக்களிடம் அபிப்பிராயம் இருக்கிறது. இதைப் பற்றி ஆராயவும் இந்தக் கமிட்டிக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினர் 1 ரூபாய் என்று குறைத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேலதிகாரிகள் கலெக்டர் மட்டத்தில் உள்ள ஒரு அதிகாரி ஒரு முட்டையின் விலை இரண்டு ரூபாய் ஆகிறது என்று பத்திரிக்கையிலே வெளியிட்டார். அப்படித் தவறான கருத்தை வெளியிட்டதற்குக் காரணம் அவர் கோழிப் பண்ணையின் கட்டடங்களுக்கு ஆகும் செலவு, அதிகாரிகளுடைய சம்பளம் இவற்றையெல்லாம் ஈடு கட்டி கணக்கு வைத்துக்கொண்டு, இதுவரையில் இடப்பட்ட முட்டைகளையும் கணக்கு வைத்துக்கொண்டு ஒரு முட்டை 2 ரூபாய் என்ற அளவிலே சொல்லியிருக்கிறார்கள். இன்றைய நிலையில் முட்டையின் விலை 2 ரூபாய் அல்ல; 25 பைசாவுக்கு முட்டை கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு வந்து அதை 25 பைசாவுக்கு கொடுத்தால் ரூபாய் 1.75-ஐ நஷ்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிப்புகளின் சார்பில் தனியார் கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்குக் கொடுக்கிற உதவித் தொகை முறையாகப் பயன்படுத்தப்படாமல் கோழிகளே இல்லாத நிலையில் உதவித் தொகைகள் ஊராட்சி ஒன்றிப்புகளிலிருந்து பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா? இது போன்ற நிலையை மாற்றுவதற்கு நம்முடைய அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சில பேர்கள் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிறையப் பணம் உதவியாகப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு கோழிகளையும் வாங்காத நிலையும் இருந்திருக்கிறது. வாங்கிய கோழிகள் எல்லாம் ஒரே நாளில் காலராவால் இறந்துவிட்டதாக தகவலும் கொடுத்து இருக்கிறார்கள். இறந்துவிட்ட காரணத்தினாலே அரசாங்கம் கொடுத்த உதவித் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கடிதங்கள் அடிக்கடி வந்திருக்கின்றன. பர்மாவிலிருந்து வந்த அகதிகளில் சில பேர் குரோம்பேட்டைப் பகுதியிலே கோழிப் பண்ணை வைத்து நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். அந்தச் சாணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, காய்கறித் தோட்டங்கள் போட்டு விளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே அதைப் பயன்படுத்தியும் இருக்கிறார்கள்; ஏமாற்றியும் இருக்கிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையில் நடத்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் "பாஷர் கலாதில்" என்பவருடன் இரண்டு சட்டசபை உறுப்பினர்களைக்கொண்ட கமிட்டி போட்டிருக்கிறது.

1968 பிப்ரவரி 16]

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, சில குறிப்பிட்ட உயர்ந்த ஜாதி இனக் கோழிகளை வளர்ப்பதற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் கோழிகள் பஞ்சாயத்து யூனியனில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொன்று கொடுப்பதன் மூலமாக அங்கே இருக்கிற தாழ்ந்த இனக் கோழிகள் இவற்றை அமுக்கி வைத்து விடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியில்லாத முறையில் ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய எல்லாக் கோழிகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு உயர்ந்த ஜாதிக் கோழிகளைச் சர்க்கார் கொடுக்க முயற்சி செய்தால் அபிவிருத்தி செய்யலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த மூவர் கமிட்டியினர் அத்தகைய அரிய கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : ஐயா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் தனியார் துறைகளில் நடத்தி வருகின்ற கோழிப் பண்ணைகள் லாபகரமானவை, மிகச் சிறந்த முறையிலே இருப்பவை என்றெல்லாம் பத்திரிகையிலேயிருந்தும், அங்கு சென்று வந்தவர்களின் மூலமாகவும் தெரியவருகிறது. ஆகவே, இங்கேயும் அதுபோன்று தனியார் துறைகளிலே இவற்றை நடத்துவதற்கு அரசினர் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அமெரிக்கா போன அனுபவம் எனக்கு இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற யோசனை தனியார் துறையின் மூலமாக இந்தப் பண்ணைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்பது. சில இடங்களில் இங்கே நஷ்டமாக நடக்கக்கூடிய தனியார்களும் இருக்கிறார்கள். ஒருவர் கோழிப்பண்ணை வைத்ததன் மூலமாக 10 ஆயிரம் ரூபாய்வரை நஷ்டப்பட்டார். அவர் ஜவுளிக்கடை வைத்து இருந்தவர், கோழிப்பண்ணை வைத்து இப்படி நஷ்டமடைந்து விட்டார் என்ற தகவலும் வந்திருக்கிறது. சில பேர்கள் வேறுவிதமாகவும் தகவல் கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி, காட்பாடி போன்ற இடங்களில் உள்ள கோழிப்பண்ணைகள் திறமையாக நடந்து வருகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளிலே எத்தகைய முறையிலே நடத்தி வருகிறார்கள் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நன்றி. அதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யலாம்.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, இந்தக் கோழி வளர்ப்பு சம்பந்தமாக அமைக்கப்பட்ட மூவர் கமிட்டி தனித் தனியாகச் சென்று விசாரிக்கிறார்களா அல்லது மூவரும் ஒன்றாகச் சென்று விசாரிக்கிறார்களா? அப்படி விசாரிக்கின்றபொழுது இது வரை எத்தனை தனியார் துறை பண்ணைகளுக்குச் சென்று இருக்கிறார்கள்? எத்தனை அரசாங்கப் பண்ணைகளுக்குச் சென்று இருக்கி

ருர்கள்? தனியார் துறை பண்ணைகளுக்கும், அரசாங்கப் பண்ணை களுக்கும் உள்ள வேறுபாட்டை கவனத்தில் கொள்கிருர்களா? அங்கங்கே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும் துணைக்கு அழைத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தக் கமிட்டி உறுப் பினர்கள் அனைவரும் ஒன்ருகத்தான் சென்று விசாரிக்கிருர்கள். அந்தந்தப் பகுதியிலே செல்கின்றபொழுது அரசாங்கக் கோழிப் பண்ணைக்கும், தனியார் நடத்துக்கின்ற கோழிப்பண்ணைக்கும் செல்கிருர்கள். எத்தனை அரசாங்கப் பண்ணைகளைப் பார்த்திருக் கிருர்கள், எத்தனை தனியார் பண்ணைகளைப் பார்த்திருக்கிருர்கள் என்பதெல்லாம் அவர்கள் கொடுக்கப் போகின்ற அறிக்கையிலே விவரமாக தெரிவிப்பார்கள்.

திரு. க. மு. ராசகோபால் : தலைவரவர்களே, இந்தத் தீவிர கோழிப் பண்ணைத் திட்டம் எப்பொழுது வந்தது? தமிழகத்தில் எந்த எந்த இடங்களிலே அரசாங்கக் கோழிப் பண்ணைத் திட்டங்கள் இருக்கின்றன ? அதற்குப் போடப்பட்ட மூலதனம் எவ்வளவு, நஷ்டம் எந்த எந்த இடங்களில் எவ்வளவு ஏற்பட்டது ? நஷ்டம் ஏற்பட்டதால் அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை ஏன் எடுக்கப் படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனியாகக் கேள்வி போடவேண்டும். இந்தக் குறைபாடுகளையெல்லாம் திருத்திக் கொள்ளக்கூடிய முறையிலேதான் மூவர் கமிட்டி போடப்பட்டிருக் கிறது. எவ்வளவு மூலதனம் போடப்பட்டிருக்கிறது, வருவாய் எவ்வளவு, லாப நஷ்டம் எவ்வளவு என்பதையெல்லாம் கமிட்டியார் ஆராய்ந்து இந்தச் சபைக்கே வைக்கக்கூடிய வாய்ப்பு விரைவிலே கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இது மூவர் கமிட்டியா அல்லது நால்வர் கமிட்டியா? கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும் பொழுது நான்கு பேர்களையும் சொன்ஞர்கள். இந்தக் கமிட்டியிலே உள்ளவர்கள் முட்டை, கோழி சாப்பிடக்கூடியவர்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது மூவர் கமிட்டிதான். அரசாங்க சார்பில் பணியாற்றுகிறவர் தகவல் சேகரித்துத் தருவ தற்காக செயலாளராகப் பணியாற்றுகிருர். கமிட்டியில் உள்ள மூன்று பேர்களும் முட்டையும் கோழியும் சேர்த்து சாப்பிடக் கூடியவர்கள்தான். ஆனல் அவர்கள் கோழிப் பண்ணைக்குச் சென்றபொழுது எந்த இடத்திலும் முட்டையும் கோழியும் சாப் பிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : பஞ்சாயத்து யூனியனிலோ அரசாங்கத்திலோ நடத்தப்படுகின்ற கோழிப் பண்ணைகளில் நஷ்டம்தான் வரும். காரணம் என்ன என்றால் அவர்கள் ஃபீடிங்குக்காகக் கொடுக்கிற சார்ஜ், பணியாற்றுகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற பணம் எல்லாம் சரியாக யூனியனிலே ஒதுக்குவது இல்லை, அப்படி ஒதுக்குவதற்கு புரவிஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் தான் நஷ்டம் வருகிறது. அது யூனியனுடைய பொறுப்பு அல்ல. முன்பு இருந்த அரசாங்கம் திட்டத்தைச் சொல்லிவிட்டார்களே தவிர போதுமான பணம் ஒதுக்கியும் பாதுகாப்புத் தந்தும் உதவி செய்யவில்லை, என்பதை அரசாங்கம் உணருமா? ஆகவே இனி மேலாவது அவற்றிற்கு எந்த அளவுக்கு பணம் ஒதுக்கமுடியுமோ ஒதுக்கி, பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினருடைய கேள்வியிலே பஞ்சாயத்து யூனியனில் ஏன் நஷ்டம் வருகிறது என்பதற்கு சமாதானம் கூறியிருக்கிறார்கள்.

திரு. மு.ச. சிவசாமி: லட்சக்கணக்கான ரூபாய் தமிழக அரசு செலவுசெய்தும் கோழிப் பண்ணை லாபகரமாக இல்லை. இதை நிவர்த்திசெய்து லாபகரமாக நடத்தக்கூடிய முறையில் ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ள நாடுகளுக்கு மூன்று உறுப்பினர்களை அனுப்பி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இன்றைய சர்க்காருடைய நிதி நிலையில் நம்முடைய சர்க்கார் அவ்வளவு செலவு செய்து அனுப்பக்கூடிய சூழ்நிலையில் இல்லை.

பொள்ளாச்சி நகருக்கு சிவில் கோர்ட்

* 56 வினா.—**திரு. இ. ராமசாமி** : மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொள்ளாச்சி நகரில் சிவில் கோர்ட் ஒன்று துவக்க அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : பொள்ளாச்சி வட்ட பொதுமக்களிடமிருந்தும், நகராட்சி மன்றத்திலிருந்தும் சிவில் கோர்ட்டு வேண்டுமென வந்த கோரிக்கைகள் எந்தெந்த காரணத்தால் மறுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது பற்றிப் பொள்ளாச்சி நகராட்சியில் இருந்து வேண்டுகோள் வந்தது. அதை நாங்கள் உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பினோம். உயர்நீதிமன்றம் அங்கே ஒரு சிவில் கோர்ட் திறக்க ஆதாரம் இல்லையென்று அறிவித்திருக்கிறது.